DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 121/2020

List of Witness : Lw11

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர். B.இளவேந்தன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பாஸ்கரன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 25/08/2025

(எதிரி ஆஜர் )

**இந்த வழக்கில் மருத்துவர் முரளிதரன் என்பவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற மருத்துவரான திரு. B. இளவேந்தன் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் பணி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2018 ஆம் தேதியில் பணியில் இருந்தபோது பாளையங்கோட்டையை சேர்ந்த 42 வயது மதிக்கதக்க வேலுச்சாமி மகன் முருகராஜ் என்பவர் தனக்கு 23.08.2018 ஆம் தேதி கிணற்று வேலை செய்யும்போது தன் மீது பாறை விழுந்ததாக கூறி காயம்பட்டு வந்த நபரை மருத்துவர் முரளிதரன் அவர்கள் பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது.

1) இடது பின்புற தலையில் 4 x2 x2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது

2) இடது தோள்பட்டை பின்புறத்தில் 6x4 செ.மீ அளவுள்ள சிராய்பு காயங்கள் காணப்பட்டது.

3) வலது தோள்பட்டையில் மேல்புறத்தில் 4 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

4) பின்புற வலது முதுகில் 10 x 2 செ.மீ அளவுள்ள பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

5) இடது முதுகில் 10 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

6) வலது முழங்கை பின்புறம் 3 x2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

7) வலது தொடையின் முன்புறத்தில் 3x1 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

8) வலது நெஞ்சு பகுதியில் 10 x 6 செ.மீ அளவுள்ள இரத்த வீக்க காயம் காணப்பட்டது.
9) இடது நெஞ்சு பகுதியில் 8 x 6 செ.மீ அளவுள்ள இரத்த வீக்க காயம் காணப்பட்டது.
10) முதுகின் நடு பகுதியில் 12 x 6 செ.மீ அளவுள்ள இரத்த வீக்க காயம் காணப்பட்டது.
11) இடது தொடையில் முன்பகுதியின் இடது பக்கத்தில் 10 x 6 செ.மீ அளவுள்ள இரத்த வீக்க காயம் காணப்பட்டது.
12) இடுப்புக்கு கீழ் பகுதி செயல் இழந்த நிலையில் காணப்பட்டது.
மேலும் அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்தபோது இடது நடுபகுதியில் உள்ள Femur எலும்பில் முறிவு காணப்பட்டது. மேலும் அவருக்கு C.T.ஸ்கேன் எடுத்து பார்த்தபோது D8 Vertebrae பாடியில் எலும்பு முறிவு காணப்பட்டது. மேற்படி நபரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து அவருக்கு மருத்துவ சிகிச்சை செய்து அவருக்கு ஏற்பட்ட காயங்களில் மேலே குறிப்பிட்ட 10, 11 , 12 ஆகிய காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் காயச்சான்று மருத்துவர் முரளிதரன் அவர்களால் வழங்கப்பட்டதாகும். காயச்சான்று **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஸ்கேன் ரிப்போர்ட் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் நானும் சேர்ந்து தான் சிகிச்சை அளித்தேன். காயச்சான்றிதழில் நானும் சேர்ந்து சிகிச்சை அளித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான், நான் தான் காயச்சான்று வழங்கினேன். காயம்பட்ட நபர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு வேறு எங்கு சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். வேலம்மாள் மருத்துவமனையில் எடுத்துக் கொண்ட சிகிச்சை பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேலம்மாள் மருத்துவமனையில் எடுத்துக் கொண்ட சிகிச்சை ஆவணங்களை நான் பெறவில்லை என்றால் சரிதான்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.08.25 17:40:47 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 25/08/2025